

உ

சுபமஸ்து.

# தமிழகம்.

வால்யூம். 1 | 1905-ஷ பிப்ரவரி மீ | நம்பர். 2.

## ஆரியர்களின் ஸங்கீத முறை.

### முகவுரை.

ஆதிகாலந்தொட்டு மனிதர்கள் ஸங்கீத விஷயத்தை ஏதோ ஒரு மாதிரியாக வைத்திருந்தார்கள் என்பது யாவர்க்கும் தெரிந்ததுதான். தெம்மாங்கு என்று வழங்கும் வண்டிக்காரர்களின் காநம், ராமேசுவரப் பயணம் போனவர்களும், வேறு ரெயில் பிரயாணம் அல்லாது ரோட்டு மார்க்கமாய் போகிறவர்களும் கேட்டிருக்கலாம். பெரிய கட்டிடங்கள் கட்டும்போது சுண்ணாம்பு இடிக்கிற கீழ் ஜாதிப் பெண்களின் காநத்தையும் நாம் கேட்டிருக்கிறோம் அல்லவா? இம்மாதிரிப் பாட்டுமுதல் பெரிய ஸங்கீத வித்துவான்கள் பாடும் ராகம், பல்லவி வரையில் இந்த தேசத்தில் வழங்கும் காநத்தின் எல்லையென்று சொல்லலாம்.

ஆனால், இந்த வித்தை யாவரும் எளிதில் தெரிந்துகொள்ளக்கூடியதாகவிருந்தாலும், இந்தக்காலத்தில் வேறு வித்தை

கள் எப்படி சரியாய் ஆராய்ந்து அறியப்படுகிறதில்லையோ, அதே மாதிரி இதுவும் அறிந்துகொள்ள சிரமமெடுப்பாரில்லாமலிருக்கிறது. திருஷ்டாந்தமாக, வாரத்தில் உள்ள ஏழு கிழமைகளின் பெயர்களையறிந்தவன் ஜோதிஷ சாஸ்திரம் முழுதும் அறிந்ததாகவெண்ணுகிறான். அதுபோலவே, காம்போதி, சங்கராபரணம் என்ற இரண்டு இராகங்களின் பெயர்களையறிந்தவன் ஸங்கீத சாஸ்திரத்தின் கரைகண்டதாக நினைத்துக்கொண்டு, "நஹிவந்த்யா விஜாநாதி குர்வீம் ப்ரஸவவேதநாம்', பிள்ளைபெறும் சிரமத்தை மலடியா அறிவாள்? என்னும் பழமொழிக்கிணங்க, வெகு சிரமப்பட்டு ஊழியம் செய்து இந்த அருமையான வித்தையை அப்பியஸித்தவர்களைப்பற்றி குணதோஷம் கூறுவது வழக்கமாயிருக்கிறது. இந்த வித்தையோ, மனிதர்க்கு ஈசன் தந்தருளியிருக்கும் அதிநுட்பமான ஞானேந்திரியமாகிய காதின் மூலமாய் அடையும் சுகத்துக்குக் காரணமானது. வைராக்கிய ஸம்பத்தோடுகூடிய க்ஷேத்திரக்ஞருடைய தெவிட்டா ஆநந்தத்தைத்தரும் பதங்களைக்கேட்டு ஸந்தோஷப்படாதவரில்லை. ஸ்ரீமாந் ராமபக்த சிரோமணியாகிய திருவையாறு தியாகராஜய்யர் அவர்கள் கீர்த்தனங்களைக் கேட்டு ஆநந்திக்காதவர் யார்?

மேலே சொல்லியவாறு காநாமிருதத்தை அநுபவிப்போர் இருந்தும், நாம் பேசி வழங்கும் பாஷையில் காநவித்தையின் ஸ்வரூபத்தை யாவருக்கும் நன்றாய் விலக்கும்படியான நூல்களே இல்லை. புஸ்தகம் இல்லாதபோது வித்தையை அறிந்து கொள்ள இடமில்லாமல் போகிறது. என்றாலும், யாராவது கொஞ்சம் சிரமம் எடுத்துக்கொண்டு இந்த வித்தையின் சில பாகங்களையாவது எடுத்தெழுதியிருந்தால், அதை வாசிக்க நேரிடும். தெரிந்த வித்துவான்கள் அதிலுள்ள குறைகளை எடுத்துரைத்து அது மூலமாய் இந்த சாஸ்திரம் ஒன்று ஏற்படுத்த இடமுண்டாகும் என்ற எண்ணத்தை மேற்கொண்டு, நான் என் சிற்றறிவிற்கு எட்டியவரையில் சங்கீத விஷயங்களை எழுத ஆரம்பிக்கிறேன்.

## ஸ்வரங்கள்.

மனிதராகிய நாம் வார்த்தை சொல்வதாகிய ஒருவித சத்தத்தைச் செய்கிறோம். அதே மாதிரியாய்ப் பிராணிகளும் அவை அவை வெவ்வேறு விதமான சத்தத்தைச் செய்கின்றன. இன்னமும், ஒரு மெல்லிய மூங்கில் கழியால் ஒரு பலகையில் தட்டினால் ஒருவித சத்தம் நம் காதில் விழுகிறது. பறையர்கள் தம் தமுக்கில் உண்டாக்கும் சத்தத்தையும் நாம் கேட்கிறோம்.

இவ்விதமாய் உண்டாகும் சத்தத்தின் விஷயங்களை நாம் அறியவேண்டுமானால் ஐரோப்பிய சாஸ்திரிகள் அநுபோகசித்தமாய் எழுதியிருக்கும் சுருதி சாஸ்திர (Acoustics) த்தைப் பார்த்துத் தெரிந்துகொள்ளவேண்டும்.

நாம் கவனிக்குமளவில் மேலேகண்டெழுதிய சத்தமெல்லாம் சத்திக்கும் வஸ்து எதுவோ அதன் வேபனம் (vibration) அதாவது நடுக்கத்தால் உண்டாகிறது என்று காணலாம். உதாரணமாக, ஒரு பிட்டில் வாத்தியத்தின் ஒரு தந்தியை நம் ஒரு விரலால் பிடித்து இழுத்துத்தள்ளிவிட்டால், அந்தத் தந்தி கொஞ்சநேரம் சத்தித்துக்கொண்டு அப்படியும் இப்படியும் அசைகிறதை நாம் கண்ணால் பார்க்கிறோம்.

இப்படி உண்டாகும் சத்தங்களில் உச்சமானவை சில, நீசமானவை சில. சாதாரணமாய் வளர்ந்த மனிதர்களின் பேச்சைக் கவனித்தால் அந்தச் சத்தம், அதே வயதுள்ள ஒரு ஸ்திரீ பேசும் பேச்சினால் ஏற்படும் சத்தத்தைவிட நீசமாயிருக்கிறது என்பதை நம் காதால் கேட்டுணரக்கூடியது தான்.

இந்த உச்சம் நீசம் என்னும் வித்தியாசம் என்ன? எவ்விதம் உண்டாகிறது? என்று கவனித்தால், உச்சமான சத்தம் அந்தச் சத்தத்துக்கு ஆதாரமான வஸ்து எதுவோ அது எவ்விதமாக வேபனம் செய்கிறதோ அதினாலே தான் உண்டாகிறது. ஒரு குறிப்பிட்ட அவகாசத்தில் கொஞ்சம் தடவை வேபனம்

செய்தால் நீசமான சத்தத்தை உண்டாக்கும். அதே அவகாசத்தில் அநேகம் தடவை வேபனம் செய்தால் உச்சமான சத்தத்தை உண்டாக்கும். ஒரு ஸெக்கண்டு நேரத்தில் ஒரு பிட்டில் தந்தி 120 தடவை வேபனம் செய்தால் அப்போது உண்டாகும் சத்தம், அதே தந்தி அதே அவகாசத்தில் 240 தடவை வேபனம் செய்வதால் உண்டாகும் சத்தத்தைவிட நீசமானதாயிருக்கும். (உச்சநீசம் என்னும் வித்தியாசம் காதே அறியக்கூடியது. அந்தவித்தியாசத்திற்குக் காரணம் மேலே சொன்னதாம்).

மேலே சொன்னமாதிரி காதால் கேட்டறியும் சத்தங்களை ஊஹத்தோடு அறிய வல்லவர்கள் ஸங்கீதத்தில் வழங்கும் சத்தரூபங்களின் நிலையைப்பின் வருமாறு இருப்பதாகச் சொல்லுகிறார்கள். என்னவென்றால், ஸ்வரம் என்னும் ஸங்கித சாஸ்திரத்தின் விபியானது, உச்சம் நீசம் என வித்தியாசத்தோடு அமைந்திருக்கிறதாகச் சொல்லுகிறார்கள். ஸ, ரி, க, ம, ப, த, நி, என்று ஏழுவிதப்பெயர்களைச் சொல்லும்போது, நாம் பேசும் குரலை ஸ வென்னும் அளவுள்ளதாக வைத்துக்கொண்டால், அதாவது பேசும் காலத்தில் உண்டாகும் சத்தம் எவ்வளவு தரம் வேபனம் செய்வதால் உண்டாகுமோ அவ்வளவுள்ளபடிக்கே ஸ என்று வாயால் சொன்னால் ரி என்பது அதைவிட உச்சமாகச் சொல்லப்படும். என்றால் ரிஎன்பது ஸவைவிட அதிகமான வேபனத்தினால் உண்டாக்கப்பட்டது. அதே மாதிரி க, ம, ப, த, நி, என்னும் ஸ்வரங்களும் முன்னே சொல்லப்பட்ட ஸ்வரத்தைவிட முறையே உச்சமானதாகும்.

இந்த ஏழுபெயர்களையும் கவனித்தபிறகு எட்டாவது ஒரு உச்சமான சத்தம் சொல்லும்போது ஸ’ (மேல் குறியிட்ட ஸ) என்னும் பெயரைத் திரும்பவும் சொல்கிறார்கள். அதற்குக் காரணம் என்னவென்றால் ஸ என்று முதலில் சொன்ன மாதிரியும், இரண்டாவது தரம் சொன்ன மாதிரியும் வேறாக இருந்தாலும், இரண்டு மனிதர்களைவிட்டு ஒருவரை முதல் ஸவைச் சொல்லச் செய்து, மற்றொருவரை இரண்டாவது ஸ்.வை அவருடன் சேர்ந்து சொல்லும்படி செய்தால் காதில் விழுங்

காலத்தில் இரண்டு ஸ்வரங்களும் ஒத்திருப்பதாகத் தெரிகிறது. அது மாத்திரமல்ல; வேறுதான் என்று சொல்லமுடியாத ஸ்திதியில் இருப்பதாகச் சொல்லலாம்.

மேலும், முதல் ஸ 120 வேபனங்களால் உண்டாக்கப்பட்டால், இரண்டாவது ஸ அதற்குச் சரியாய் இரண்டு மடங்கு அதாவது 240 வேபனங்களால் உண்டாகிறது.

இந்த யுக்தியை உபயோகித்தாலே, நாம் பேசும் பேச்சு என்ன அளவுள்ளதோ அதற்கு சரி பாதியளவுள்ளதாக அதாவது, 60 வேபனங்களால் உண்டாகும் ஒரு ஸ வும் இருக்கலாமல்லவா? அந்த மாதிரி உண்டாகும் ஸ்வரத்துக்கு ஸ, (கீழ்க் குறிபிட்ட ஸ) என்று ஸௌகரியார்த்தமாக ஸங்கேதம் வைத்துக் கொள்வோம்.

ஆகவே, மூன்று வரிசையான ஸ்வரங்கள் உண்டாகின்றன.

(1) ஸ, ; ரி, ; க, ; ம,; ப, ; த, ; நி, ;
(2) ஸ; ரி; க; ம; ப; த; நி.
(3) ஸ', ரி', க', ம', ப', த', நி.

என்று மூன்று விதமான ஸ்வரங்கள் உண்டாகும். இரண்டாவது வரிசை ஸ்வரங்கள் ஒரு மடங்கு வேபனத்தால் உண்டானால், முதல் வரிசை ஸ்வரங்கள் அதற்குச் சரிபாதி மடங்கு வேபனத்தாலும், மூன்றாவது வரிசை ஸ்வரங்கள் அதற்கு இரண்டு மடங்கு வேபனத்தாலும் உண்டாகின்றன.

இதையே மூன்று ஸ்தாயி என்று வழங்குகிறார்கள். முதல் வரிசை ஸ்வரங்களுக்கு மந்த்ரஸ்தாயிஸ்வரங்களென்றும், நடு வரிசை ஸ்வரங்களுக்கு மத்தியஸ்தாயிஸ்வரங்கள் என்றும், மூன்றாவது வரிசை ஸ்வரங்களுக்கு தாரஸ்தாயிஸ்வரங்கள் என்றும் பெயரிட்டு வழங்குகிறார்கள்.

(இன்னும் வரும்.)

**P. S. ஸுந்தரம் அய்யர் B. A. L. T.**

# சரீரதத்துவ விளக்கம்.

## முகவுரை.

கடவுள் படைத்த இப்பேருலகத்தில் நாம் பார்க்கும் பொருள்களை எல்லாம் மூன்று பெரும் பிரிவுகளாய்ப் பிரிக்கலாம். அவையாவை எனில், தாதுவர்க்கம், தாவரவர்க்கம், ஜீவ வர்க்கம், எனப்படும் மூன்றுமே. இவற்றுள், ஒவ்வொன்றையும் பல உட்பிரிவுகளாய்ப் பிரிக்கவுங்கூடும். ஆனாலும், இப்பொழுது நாம் கவனிக்கவேண்டிய விஷயம் அதுவன்று. அப்படியாயின், இங்கு இதை உரைப்பானேன் என்பீராகில், நாம் எப்போதும் மறக்காமல் அறியவேண்டியது ஒன்றுண்டு. அதாவது, தாதுப்பொருளுக்கும் தாவரத்திற்கும், தாவரத்திற்கும் விலங்கிற்கும், விலங்கிற்கும் அதன்மேற்பட்ட மானிடருக்கும், முறையே உண்டாயிருக்கும் வித்தியாசத்தை நோக்குங்கால் மடுவிற்கும் மேட்டிற்கும் போலிருக்கும் அநுக்கிரமமான இரண்டு வர்க்கங்களுக்கும் இவ்வளவு வித்தியாசம் இருக்கிறதென்றால், முதல் அணுத்தோற்றத்திற்கும் முற்றும் முடிந்த மனிதருக்கும் உள்ள பேதத்தைப்பற்றிச் சொல்ல வேண்டியது வேண்டாதாயிற்று. ஆயினும், பச்சைமரத்தாணி போல் மனதில் வரையவேண்டிய உண்மையொன்று உண்டென்றோமல்லவா? அது இப்போது தெளிவாய் விளங்கும். தோற்றம்மாறி வேற்றுமை அடைந்து இயலும் தாவரங்களென்ன, ஏற்றமான விலங்குகளென்ன, இவை யனைத்தும் தத்தம் தளவாடங்களைத் தாதுக்களிடத்தே பெறுகின்றன. தற்காலத்தில் இரசாயனம் பயிலும் சோதனை சாஸ்திரத்தில் சிறந்தவர் பலரும், இவ்வுலகத்துள்ள சற்றேறக்குறைய எழுபது மூலவஸ்துக்கள் தம்முள்ளேயே தாங்கள் பலவிதமாய்க் கலப்பதினாலேயே அனந்தகோடி பேதமான தோற்றங்கள் உண்டாகின்றன என்று சொல்லுகிறார்கள். இப்படிச் சொல்லுவது அகாரணமாயுமன்று. கலப்பான பதார்த்தங்களைப் பிரித்தும் மூல பதார்த்தங்களை ஒன்று சேர்த்தும் பலவித பரிசைஷகளைச

செய்து கூறுபடுத்தியும் கூட்டியும் தாம் அறிந்த சாஸ்திரவுண்மையின் உறுதியை முன்னிட்டே அவர்கள் இவ்வாறு சொல்லுகிறார்கள். மூலவஸ்துக்கள் ஒன்றோ பலவோ? அல்லது ஜடமென்றுதான் ஒன்றுண்டோ? என்னும் இந்த விஷயத்தைப் பற்றி நாம் இவ்விடம் பேசவேண்டியதில்லை. நம்மை எதிரிட்டு நிற்கும் உலகநிலையைப் பரிசோதித்து நமக்குள்ள அறிவை விருத்திசெய்யவேண்டியது நமது கடமையாயிருக்கிறது.

அறிவென்பதில்லாப் பரமவணுவினின்றும் வளர்ச்சி ஒன்றுமே அதிகமாயுள்ள தாவரமும், அதினின்றும் உணர்ச்சியும் சேர்ந்து உயிர்த்திருக்கும் சிறு புழுவும், அதினின்றும் படிப்படியாய் விரிந்துழலும் விலங்குகளும், அவற்றினின்றும் உடல் உறுப்பு உணர்வு உள்ளம் என்ற எல்லாவற்றையும் அடைந்து, ஆறறிவுடன் ஆத்மவிசாரஞ்செய்யும் மனிதனும் இவையெல்லாம் தோன்றினவென்பது எவ்வளவு ஆச்சரியமான உண்மை. எல்லாம் வல்ல எம்பெருமானது ஆஞ்ஞையாலன்றோ ஆகாததும் ஆகும்! மனிதரது சிற்றறிவுமாத்திரம் என்ன அறியக்கூடும்? ஒரு பவழத்தைப் பார்ப்போம். இது தாவரமோ? தாதுப்பொருளோ? அல்லது விலங்கின விளைபொருளோ?—தாவரமென்போமானால், வழுவழுப்பும் பிரகாசமும் வன்மையும் இருக்கின்றன. தாதுப்பொருளே என்போமானால், கிளைவிட்டும் அடிபெருத்தும் நுனிசிறுத்தும் இலையிதழ்போன்ற உறுப்புகள் அமைந்தும் உள்ளதே. விலங்கினப்பொருளே என்போமானால் முன்சொன்ன குணங்களே பொருந்தாதனவாகும். ஆயினும், சிறு புழுக்கள் கடலில் உண்டாக்கும் கூடுகள் இவை, என்று நாம் அறிவோமல்லவா?

அறிவெல்லாம் சிறியதே ஆயினும், நாம் அச்சிறியதையும் அறியோமாகில் குற்றம் பெரியதாமன்றோ? அதினும், சாதாரணமாயும் சுலபமாயும் அறியக்கூடியனவாகிய சாஸ்திரங்களை அறியவேண்டாதிருப்பது பிழையே. நம் சரீர சுகத்திற்கு இன்றியமையாததாகிய தேகசாஸ்திரத்தை விரும்பாது விடுதல் பெருங் குற்றமே. கடைசியாக, மனித சரீரகுணவிசே

டங்களைப் பற்றிச் சொல்லும் அதன் சிறுதொகுதியை அறியாமல் இருப்பதற்கு நியாயமே இல்லை.

சிலர் சொல்லுவார்:—என்ன ஐயா! எப்படி நாம் உட்கொள்ளும் உணவு சீரணமாகின்றது என்று நாம் அறியாவிட்டால் அன்னம் சீரணமாகாதா? ஏன் தூக்கம் அவசியமென்பது தெரியாதாயின், நாம் தூங்கமாட்டோமா?—இப்படிப் பேசுவாரும் உண்டு. அதற்கு உத்தரம் நாம் சொல்லவேண்டியது அநாவசியம் என்று தோன்றுகிறது. நம் முடற்கூறுகளையும் அவற்றின் தொழில் முறைகளையும் நாம் அறிந்து இருப்பின் நோய்கள் வாரா தொழிக்கவும், வந்த நோய்களைத் தீர்க்கவும் நம்மால் கூடுமல்லவா? அன்றியும், அறிவின்விருத்தி தன்னிலேயே ஓர் இன்பமன்றோ? இப்படியிருக்க, கரும்புதின்னக் கூலியுமுண்டு என்றால், அப்போதும் நமக்கு வேண்டாம் என்று சொல்வோரது எளிமை எமக்கு உத்தரவாதமில்லாததாகவே தோன்றுகின்றது.

ஆகையால், மனித சரீரத்தின் கட்டையும், அவயவங்களின் தொழின் முறையையும், சதை, நரம்பு, எலும்பு, இரத்தம், முதலிய பலவிதப் பொருள்களின் உபயோகத்தையும் நாம் கவனிப்பது அவசியம். இவ்வுடல் 'ஏதோ மாயை', 'புன்புலால் யாக்கை', என்றும், 'மலமாங்கிருமி சேர்ந்த மலபாண்டம்', என்றும் நினைத்து, இதனைப்பற்றிய விசாரணை நமக்கு வேண்டாம் என்று விட்டு விடாதேயுங்கள்! மனிதவுருவெடுத்தேயன்றோ நாம்புருஷார்த்தங்களைக் கருதிக் கைப்பற்ற வேண்டும் அச்சரீரத்தைக்கெடுத்து, சுகத்தைத்தடுத்து, மனதைப் படுத்துவதில் காரியமில்லை. தான் பிறக்கும் முன்னமே தன் உணவுக்காகத் தாய்முலையில் பாலுண்டாக்கும்குழவியனை நோக்குவார் யாரே தம்முடலை ஏசுவார்? நம்பாட்டியார் சொன்னதை மறப்பரோ?

"அறம், பொருள், இன்பம், வீடு, என நான்கும் உருவத்தாலாய பயன்," என்று ஔவையார் கூறவில்லையா?

ஒருவாறாக இவ்வித்தையின் அவசியத்தைத்தெரிவித்தோம். இப்போது இந்த சாஸ்திரத்தின் உண்மைகளை அறியும்படி நாம் செய்யவேண்டிய சோதனைகளைப் பற்றியும், இந்த சாஸ்திரத்தின் சில பொது இலக்ஷணங்களைப்பற்றியும் சிறிது சொல்லுவோம்.

ஜடசாஸ்திரத்திலும் இரசாயனத்திலும் கையாண்டு வர வேண்டிய பரிக்ஷைகள் எளிதாய் யாவரும் தாமே செய்து பார்த்துக்கொள்ளலாம். ஆனால், இந்த சாஸ்திரத்திற்கோ வென்றால் வெட்டியும் கிழித்தும் அறுத்தும் வறுத்தும், அங்கங்களை யெல்லாம் பங்கஞ்செய்து கண்டங்கண்டமாய்ச் சேதித்துத்துண்டங்களை யெல்லாம் சோதித்தல் வேண்டும். பலருக்கும் இச்செய்கை கொடுமையாகவே தோன்றும். ஆகிலும், இப்பரிக்ஷைகளை நாம் செய்யவேண்டியதில்லை. நம்முன்னோர்கள் இவற்றை யெல்லாம் தாமே கண்டு தம் கல்வியின் பயனை நமக்கோர் பித்ரார்ச்சிதமாகவே அளித்திருக்கிறார்கள். இவற்றையே நாம் அனேகமாய் உண்மையென்று கொள்ளலாம். இங்குமங்கும் சமயோசிதமாயும் தற்கால புத்தி நுட்பத்திற்கேற்றபடியும் நாம் சிலவற்றை மாற்றியே விசாரித்தல் வேண்டும்.

(இன்னும் வரும்)

**T. K.** கோபால ராவ்.

---

# பூகம்பமும் எரிமலையும்.

(20-ம் பக்கத் தொடர்ச்சி.)

பூமிக்குள் உண்டாகும் குழப்பம் முதலில் பூமியை அசைக்கிறது; பிறகு, பூமிக்குள் உஷ்ணமடைந்து உருகிய பொருள்களைப் பலவந்தமாக வெளியேறச்செய்கிறது. பூகம்பத்தால் பூமியின் ஒருபாகத்தில் ஒரு பெரிய வெடிப்பு உண்டாகிறது. அது

பூகம்பத்தால் பூமிக்குள் உண்டாகும் ஆவி, புகை, கற்குழம்பு முதலியவைகளை வெளியேற்றுவதற்கு வழியாகிறது. பூமியி னின்றும் புதைவாணம் கிளம்புவதுபோல் வன்பொருள்கள் பூமியினின்றும், அப்பிளப்பு அல்லது துவாரத்தின் வழியாய், ஆகாயத்திற் கிளம்பி மழைபோல் பெய்து அதன் நாலாபக்கங் களிலும் விழுகின்றன. அவ்விடத்தில் அப்பொருள்கள் விழு வதால் சர்க்கரைப் பொட்டணம்போல் குவிந்த வடிவினையு டைய ஒரு சிறிய குன்று உண்டாகிறது. அதற்கு எரிமலை யென்று பெயர். நெருப்பு எம்மாதிரி எரிகிறதோ அதுபோல் அது எரிகிறதில்லை. ஆனால் அது பூமிக்குள் உண்டாகிற உரு கிய கற்குழம்புகளை வெளிப்படுத்த ஓர் வழியாகிறது. சாதா ரண மலைக்கும் இதற்கும் மிக வித்தியாசமுண்டு. இது பூமிக் குள் செல்லுகிற ஒரு துவாரத்தைச் சுற்றிப் பொலபொலப் பான வஸ்துக்களும் இறுகிய கற்குழம்பும் அடுக்கடுக்காக ஒன்றின்மேலொன்று அடுக்கப்பட்ட ஒரு குவியலேயாம். ஒரு எரிமலையை நடுவே பிளந்து பார்த்தால் மேற்சொன்னபடி இருக்கக்காணலாம்.

எரிமலையின் மேல்வாயிலுக்கு ஆங்கிலேய பாஷையில் 'க்ரேட் டர்' (Crater) என்று பெயர். அதன் வடிவம் பெய்குழலின் (Funnel) வடிவினதாயிருக்கும். எரிமலையினின்றும் கக்கப் பட்ட வன்பொருள்கள் மறுபடியும் அதன் வாயிலிலும் அதன் பக்கங்களிலும் உருண்டோடிவிழும். அப்படி விழுகின்ற பொருள்கள் அடுக்கடுக்காக ஒன்றின்மேலொன்று பொருந்தி எரிமலையின் வாயையும் பக்கங்களையும் நோக்கிச் சரிந்துநிற்கும். அவ்வெரிமலையின் துவாரத்தின் பக்கங்களில் ஏற்கனவே விழுந்துகிடக்கிற சாம்பல், மணல், முதலிய பொலபொலப் பான வஸ்துக்களுடன் பிறகு வெளியேறுகிற உருகியகற்குழம்பு படியும்போது அவைகளை ஒன்றுசேர்த்து ஒரு கடினமான பொருளாகச் செய்கிறது. இப்படிக் கற்குழம்புகள் படிவதால் அவ்வெரிமலையின் க்ரேட்டர் பலப்படுகிறது. இதேமாதிரியா கத்தான் எரிமலை துவாரத்தின் உட்பக்கமெல்லாம் கடினமான கல்லாலாகிய குழாயாலமைத்தது போலாகிறது.

ஒரு எரிமலை முதல் முதல் கக்க ஆரம்பிக்கும் காலத்து, ஏராளமான மேகபடலம் போன்ற நீராவியானது வெளிப்படுத்தப்படுகிறது. நெருப்பு மயமான இக்காட்சியில்கூட ஜலமும் சம்பந்தப்பட்டிருக்கிற தென்பதை இதனால் தெரிவிக்கிறது. எரிமலைக்கு வயிற்றுவலி வந்ததுபோல் நீராவிப்படலம் கொஞ்சம் வெளியேறியும் பிறகு கொஞ்சமடங்கியும் மறுபடியும் கொஞ்சம் வெளியேறியும் இப்படி வெகுகாலம் நீடித்துநிற்கும். புகை வெளியேறும் ஒவ்வொரு தடவையும் அது செங்குத்தாக வெகு உயரம் கிளம்பும். அப்படிக் கிளம்பும்போது வெளிக் காற்றின் தன்மையால் மழைபோல் மாற்றப்படினும் படும்; அல்லது கலைக்கப்படினும் படும். இவ்வித நீராவியுடன் கலந்த வேறு சில வாயுவும் வெளிப்படும். ஆனால் அவைகள் நெருப்புப் பற்றி எரியும் தன்மையுடையவைகளல்ல. எரிமலையினுச்சியில் எரியும் நெருப்பின் சுவாலையைக் கண்டதாகச் சொல்லுபவர்கள் விஷயஅஞ்ஞானத்தால் கண்டதுபோல் சொல்லியிருக்க வேண்டுமேயல்லது வேறல்ல. ஏனெனின் கண்ணுக்குச் சுவாலையாகப்புலப்பட்டது; அம்மலையினின்றும் வெளிப்பட்ட வாயுவின் காந்தியாகவாவது அல்லது அத்துடன் கலந்துவந்த சிவந்த உஷ்ணக்கற்கள், சாம்பல், பொறிகள் இவைகளுடைய சோபையாகவாவது இருத்தல்வேண்டும். இதையும் தவிர, பிரகாசத்துடன்கூடிய அவ்வெரிமலையின் துவாரத்தின் தன்மையாகவாவது அல்லது அம்மலையின் பக்கங்களில் விழுந்திருக்கிற கற்குழம்பின் சாயையாகவாவது இருத்தல்வேண்டும். எரிமலை முதல் முதல் கக்கும் காலத்தில் பெரிய கற்பாறைகள் வெளியே தள்ளப்படும். கொஞ்சக்காலமமர்ந்த பிறகு உள்ளடங்கிய நீராவியும் காற்றும் வெளியேற முயல்வதால் அவ்வெரிமலையின் துவாரத்தினது மேற்பாகத்தை மூடிக்கொண்ட கடினப்பொருள்களை வெளியேற்றும். 1553-ம் வருஷத்தில் கியூட்டோ நகர்க்குச் சமீபமாயிருக்கிற 'கொட்டோபாக்ஸி' என்னும் எரிமலை கற்குழம்புகளைக் கக்கியபோது 9 அடி குறுக்களவுள்ள ஒரு கல்லை 15 மைல் தூரத்திற்கப்புறம் விழும்படி அவ்வளவு வேகமாய் வெளியேற்றினதாகத் தெரியவருகிறது.

எரிமலை மிகுதியாகக் கக்குவது சாம்பலையே. ஒவ்வொரு வீட்டிலுமிருக்கும் அடுப்பின் சாம்பலுக்கும் இதற்கும் மிக வித்தியாசமுண்டு. எரிமலையின் சாம்பல், மலைக்கிட்டங்களின் (உருகிய கற்பாறைகளின்) துகள்கள். அக்கினிமலையினின்று முண்டாகும் கற்குழம்பின் நீர் அம்மலையினின்றும் வெளியேற்றப்படும்பொழுது காற்றினால் சிதறுண்டு சிறு துளிகளாகக்கீழே விழும். அவைகள் சாம்பல்போன்ற தன்மையையடைந்து கண்ணுக்குப் புலப்பட்டாலும் இறுகிய கடற்பஞ்சின் துண்டுகளைப் போல் விளங்கும். சிலசமயங்களில் அக்கினிமயமான நீர் சிறிய துளிகளாகப் பிரிக்கப்பட்டு பூமியைச் சேர்வதன்முன் அவைகள் கெட்டியாகி எரிமலைத்தூள் அல்லது புழுதியென வழங்கப்படுகின்றன. இவ்விதப் புழுதித் திரள் அவ்வெரிமலையைச் சுற்றி அனேக மைல் தூரத்திற்குப் பரவி மேகபடலம்போல ஆகாயத்தை மறைக்கும். அப்பேர்க்கொத்த படலங்கள் காற்றால் மோதப்பட்டு வெகுதொலைக்குக் கொண்டுபோகப்படுகின்றன. அகன்ற பெருங் கடலடியெல்லாம் எரிமலையின் அழிபொருள்களாகிய தூள்கள் படிந்திருக்கின்றனவென்று "சாலஞ்ஜர்" என்னும் பத்திரிகை நமக்கு அறிவிக்கிறது.

எரிமலை அக்கினியைக் கக்கும்போது உண்டாகும் நீராவி மழைத்தாரையாக மாறியபோது எரிமலைத் தூள்கள் உஷ்ணமான சகதிக் குழம்பாக மாற்றப்பட்டு மலையின் பக்கங்களில் காட்டாறுபோல் பாய்ந்து எதிர்ப்பட்டவைகளைப் புதைத்து மறைக்கும். அனேக வருஷங்களுக்குமுன் இத்தாலியா தேசத்திலுள்ள 'விஸூவியஸ்' என்னும் எரிமலை கற்குழம்பைக் கக்கியபொழுது உண்டாகிய சகதிக்குழம்பின் வெள்ளத்தால் 'ஹர்கூலேனியம்' என்னும் பட்டணம் மூடிமறைக்கப்பட்டது. அதே தருணத்தில் 'பாம்பி' என்னும் பட்டணமும் அவ்வெரிமலையின் புழுதியாலும் சாம்பலாலும் புதைக்கப்பட்டது.

(இன்னும் வரும்)

K. இராமனுஜ அய்யங்கார்.

# சாக் அல்லது சீமைச்சுண்ணாம்பு.

இப்பிரபஞ்சத்தில் நம்மைச்சுற்றிலும் எண்ணிறந்த பதார்த்தங்கள் இருக்கின்றன. அவைகளுள் சிற்சில பார்ப்பதற்கு மிகவும் அற்பப்பிரயோஜனமுள்ளவைகளாகத் தோற்றுகின்றன. வேறுசிலவற்றின் உபயோகமே நமக்கு நன்கு விளங்குவதில்லை. என்றாலும், ஒரு ஆங்கிலக்கவி சொல்லும் விதம் 'நிஷ்பிரயோஜனமாய்த் தோன்றுகிற இழிவான ஒரு புஷ்பமும் நாம் ஆழ்ந்து கவனித்தால் ஆநந்தக்கண்ணீர் சொரியச்செய்யும் தத்துவங்களை அடக்கிக்கொண்டிருக்கும்', என்பது ஒருவாறு உண்மையே. அதேவிதமாகக் கீழே எடுத்துப் பேசப்போகிற விஷயமாகிய 'சாக்' என்பது இங்கிலீஷ் பள்ளிக்கூடங்களில் பழகும் சிலருக்கு மாத்திரம் தெரியுமேயொழிய மற்றப்பெரும்பான்மையோருக்குத் தெரிவதற்கு இடமில்லை. என்றாலும், இவ்வளவு அற்பமாய்த் தோன்றும் பதார்த்தத்தினின்று நாம் என்ன என்ன விஷயங்களை அறியலாம் என்று விசாரிப்போம்.

நாம் ஏதாவது ஒரு கிணற்றை வெட்டப்புகுங்கால் பூமிக்குள்ளிருந்து பற்பல விதமான தாதுக்கள் எடுபடுவதைக் காண்கிறோம். அவைகளுள் சில வெண்மையாகவும், சில மஞ்சளாகவும், சில சிவப்பாகவும், சில களியைப்போல் மெதுவாகவும், சில மண்ல்மணலாகவும், சில பூர்கப்பியைப்போன்றும், சில பாறைபோல் கட்டிகட்டியாகவும், அந்தக்கிணறுவெட்டுமிடத்துக்குத் தக்கபடி அகப்படுகின்றன. இதுவுமன்றி இந்தத் தாதுக்கள் பூமியில் அடுக்கடுக்காய்ப் புதைந்துகிடப்பதைப் பார்க்கலாம். இவ்விதம் குறிப்பிட்ட பல இடங்களில் பல கேணிகளை வெட்டிப்பார்க்குங்கால் இவ்வடுக்குக்களில் கொஞ்சம் ஏற்றத்தாழ்ச்சியுடன் சில மறைவதையும், சில புதிதாகத் தோன்றுவதையும், சில கனதியில் குறைவதையும் கூடுவதையும் பார்க்கலாம். இவ்விதம் இத்தாதுக்கள் அடுக்கடுக்காய் இருப்பதிலிருந்து நாம் ஊஹிக்கக்கூடியது ஒரு விஷயம் உண்டு.

அது யாதெனில், இவைகளெல்லாம் ஜலத்தின் செயலே ஒழிய வேறில்லை என்பதே. உலகத்தில் ஸாதாரணமாய் ஒரு பெரும் மழை பொழிந்தவுடன் உண்டாகும் தண்ணீர்ப்பிரவாஹமானது மேடுபள்ளங்களைச் சமநிலமாக்கும் திறமையுள்ளது என்னும் விஷயம் நமக்கு எளிதில் புலப்படும். இவ்விதமாக மேடுபள்ளங்கள் மனிதராலாக்கப்பட்டிருந்தாலும், இயல்பாகவே ஏற்பட்டிருந்தாலும், ஜலத்தால் கரைக்கப்பட்டும் தூர்க்கப்பட்டும் சமநிலமாக நிரவப்படுகின்றன. இயல்பாகவே மேடுபள்ளங்கள் ஏற்பட நமக்கு ஸாதாரணமாய்த் தெரியாத காரணம் ஒன்றுண்டு. அது யாதெனில்: இப்பூகோளத்தின் மேலோடானது பூமி மட்டத்திற்கு வெகுதூரம் கீழே உள்ள அதிக வெப்பத்தினால் நன்றாய் உருகியிருக்கிற கற்குழம்புபோன்ற பதார்த்தங்களும், அந்த வெப்பம் மேன்மேலும் மிகவே உண்டாகும் ஆவிப்பொருள்களும், வெளியே எழும்ப எத்தனிப்பதால் சிலவிடங்களில் உயர்வதும் சிலவிடங்களில் தாழ்வதும் ஸஹஜமாகவேயிருக்கின்றது. இது விஷயத்தை நாம் ஒருவாறு அறிந்துணரவேண்டுமானால் வெந்நீரில் நன்றாய் வெந்துகொண்டிருக்கிற ஒரு உருண்டையான கத்தரிக்காயைக் கவனித்துப் பார்த்தால் தெரியும். அதன் மேற்பரப்பில் மேடும் பள்ளமுமாய் இருப்பதுபோலவே நமது பூகோளத்தின் மேற்பரப்பில் பர்வதங்களும் சமுத்திரங்களும் அமைந்திருக்கின்றன. கத்தரிக்காயில் உஷ்ணம் ஏற ஏற அதற்குள்ளிருக்கும் ஜலம் ஆவியாகப் பரிணமித்து வெளியே வர எத்தனித்துக் காயின் மேற்றோலியைப் பிளந்துகொண்டு வெளியே வருவதுபோலவே பூமியிலும் உள்ளிருக்கும் உஷ்ணத்தால் கொதித்துக்கொண்டிருக்கும் பதார்த்தங்கள் வெளியே அதிக பலத்துடன் வர எத்தனிக்கையில் ஒரு சமயம் பூகம்பம் ஏற்படலாம்; அல்லது எரிமலை ஒன்று தோன்றி அதன்வழியால் உள்ளிருப்பதை வெளிக்கக்கலாம்; அல்லது பூமியின் மட்டத்தைக் கொஞ்சம் தூக்கிவிட்டாலும் விடலாம்.

(இன்னும் வரும்)

**T. R.** ஸ்ரீநிவாச அய்யங்கார், **B. A.**

47

# கொடைவள்ளலாகிய லாரென்ஸோ என்பவன் சரித்திரம்.

பதினைந்தாவது நூற்றாண்டில் பிளாரென்ஸ் என்ற இத்தாலிய நகரம் ஒரு குடியரசாக இருந்தது. அதன் அதிகாரிகள் பன்னிரண்டு நகரத்தாரின் பிரதிநிதிகள் சேர்ந்த ஒரு சங்கத்தார். சட்டங்களை அநுபவத்துக்குக் கொண்டுவந்து காரிய நிர்வாஹம் செய்தவன் "கொடிபிடிப்போன்" என்று பெயரிடப்பட்டிருந்தான். 1448௵ ஜனவரி௴ 1௳ பிளாரென்ஸ் நகரத்தில் லாரென்ஸோ டி. மெடீச்சி என்பவன் பிறந்தான். அவன் முன்னோர்கள் செல்வத்தாலும் அறிவின் முதிர்ச்சியாலும் பலதலைமுறையாகக் கீர்த்திபெற்றிருந்தார்கள். அவன் பாட்டனாகிய காஸ்மோ டி. மெடீச்சி என்றவன் வணிகருக்குள் மன்னனென்று சொல்லும்படி மேன்மை பெற்று இருந்தது மன்றி மிகக்கல்விமானாகவும் இருந்தான். அவன் புஸ்தகசாலைகளையும் பொருட் காட்சிச்சாலைகளையும் ஸ்தாபித்தான். கல்விமான்கள் அவனோடு உண்டதுமன்றி அவனுக்குச் சமதையாகவும் நடத்தப்பட்டார்கள். ஆனால் கீர்த்திமிகுந்த லாரென்ஸோ அக்காஸ்மோவைப் பார்க்கிலும் மேன்மை பெற்றவன். திருமகள் தன் அருள் முழுவதையும் அவனுக்கு அளித்திருந்தனள் என்னும்படி இருந்தது. அவன் மரக்கலங்களும் பண்ணைகளும் சுரங்கங்களும் வரம்பில்லாத செல்வத்தை அவனுக்குத் தந்தன. அவன் திருமாளிகைகள் ஆர்னோ என்னும் நதிபாயப் பெற்ற அழகிய பள்ளத்தாக்கில் இன்பமளிக்கத்தக்கபடி அமைந்திருந்ததுமல்லாமல் செல்வத்தாலும் சிற்பக்கலைகளாலும் எவ்விதமான அழகுகள் உண்டாகலாமோ அவ்விதமான அழகுகள் நிறையப்பெற்றுமிருந்தன. ஆயிரக்கணக்கானவர்கள் அவனிடத்தில் கொடைபெற்றார்கள். புலவர்கள் அவனைப் புகழ்ந்து பாடினார்கள். அவன் பிறந்த நகரில் அவனுக்கு மிகுந்த செல்வாக்கு இருந்தது. அவன் பெற்றிருந்த இந்தப்

பாக்கியங்களெல்லாவற்றிலும் அச்செல்வங்களைத் தக்கபடி பயன்படுத்த அவனுக்கிருந்த திறமையே மேலானது. அவன் பலம் பொருந்திய உடலும் மாட்சிமை தங்கிய முகவொளியும் பெற்றவன். அவன்வாக்குச் சற்றுக்கண்டிப்புள்ளதாயிருந்த போதிலும் கேட்போர் மனதைக் கவருந்தன்மையுள்ளதாயிருந்தது. வேடிக்கையாக நடந்த போர்ப்பரீக்ஷையில் தனக்குச் சமானமான குதிரைவீரன் எவனும் இல்லை என்று காட்டினன். தன் காலத்தில் இருந்த இத்தாலியக் கவிகளில் முதல்தரமானவர்களுக்குள்ளே இவனும் ஒருவனாக இருந்தான். கல்வியின் பலபல பிரிவுகளிலும் சிற்பசாஸ்திரத்திலும் உள்ள குறைகுணங்களை இவன் எடுத்துக்காட்டும் திறமை உள்ளவன்.

இவ்விதமாக இவன் சுகித்து வாழ்ந்துகொண்டிருந்த போது இவனுக்குத் திடீரென்று ஒரு துன்பம் நேரிட்டது; இவனையும் இவன் சகோதரனாகிய ஜியூலியானோ என்பவனையும் கொலைசெய்து மெடீச்சிவம்சத்தையே வேருடன் தொலைப்பதற்காக ஒரு சதியாலோசனை நடந்தது. இதற்குக்காரணமாக இருந்தவன் 'போப்' என்று பட்டம் தரித்த ரோமன் காத்தோலிக் தலைவனான ஸெக்ஸ்டஸ் IV. என்னும் கொலை பாதகனே. இக்கொடியோனுக்குத் தீவினைக்கருவிகளாக அமர்ந்தவர்கள், பைசா நகரத்துப் பிரதான கண்காணியும் ஒரு போப்பின்காரிய நிர்வாஹ சங்கத்தவனுமாகிய கார்டினல் என்னும் ஒரு உத்தியோகஸ்தனும் தான். 1478௵ ஏப்ரல்௴ இந்த இரண்டு கனம் பெற்ற உத்தியோகஸ்தர்கள் பிளாரென்ஸ் நகரத்துக்கு வந்து தங்கள் வஞ்சத்தொழிலில் கூட்டாளிகளாகும் பொருட்டு பல அஞ்சா நெஞ்சராகிய கழுத்தறுக்கும் பேர்வழிகளைத் தங்களுடன் சேர்த்துக்கொண்டார்கள். அப்பொழுது பியஸோலி என்னும் இடத்திலுள்ள தன் சிங்காரமாளிகைக்கு வரவேண்டுமென்று லாரென்ஸோ அழைத்ததற்கு, அக்கனவான்கள் வெளிப்பூச்சான புன்னகையோடு இணங்கி, அங்குசென்றார்கள். அதிதிவிசுவாசத்தோடு லாரென்ஸோ அளித்த விருந்தை நுகர்ந்துகொண்டிருக்கும்

போது, அவனைக் கொல்லும்விதம் இப்படியென்று கூட்டாலோசனை செய்துகொண்டார்கள்:— பிளாரன்ஸ் நகரத்திலுள்ள தேவாலயங்களில் ஒன்றிற்கு ஓர் ஞாயிற்றுக்கிழமை போய்த்தரிசனம் செய்ய விருப்பமுண்டென்று அக்கனவான்கள் லாரென்ஸோவுக்குக் குறிப்பாகக் காட்டினார்கள். லாரென்ஸோ அவர்களுடன் செல்ல உடன்பட்டான். திருவாராதனம் ஆரம்பமாகையில் கொலைபாதகர்கள் தங்கள் கத்திக்கு இரையாக்கத்தாம்கருதிய பேர்வழிகளுக்கு அருகாமையில் வந்து தங்கி இருந்தார்கள். கிருஸ்து தேவன் உடலென மதிக்கப்படும் திருவுணவு எடுப்பதாகிய திருவாராதன முறைகளுள் ஒன்று நடந்து கொண்டிருந்தது. அப்பொழுது, திருச்சபையிற் கூடியிருந்தவர்களெல்லாம் அப்பொருளை வணங்குவதில் ஆழ்ந்த நெஞ்சினராய் இருக்கும்போது, சதியாலோசனைக்காரர்களில் இருவர் ஜூலியானோவை நோக்கி விரைந்தோடித் தமதுகத்திகளால் அவனைத்திரும்பவும் திரும்பவும் பலமுறை வெட்டிக் கொன்றனர். அக்கணமே லாரென்ஸோவுக்கும் ஒருவெட்டு விழுந்தது. ஆயினும்இரண்டாவது வெட்டு அவன்மேல் விழுவதற்குமுன், அவன் தனது வாளை உருவிக்கொண்டான். அச்சமும் அரவமும் எங்கும் பரவியது. அவனைச்சூழ்ந்திருந்த நகரத்தார் சிலர் அவனை விரைவாக வீடு கொண்டுபோய்ச் சேர்த்தார்கள். மற்றவர்கள், சதியாலோசனைக்காரர்களை வேட்டையாடிச் சென்று அவர்களை மாய்த்தார்கள். இக்கொடுமைக்கெல்லாம் முக்கியகாரணமாக இருந்த பிரதான கண்காணிப்பாதிரி குருக்களுக்குரிய உடைகள் போட்டுக்கொண்டிருந்தும், அதை மதியாமல் ஒரு பலகணி உத்திரத்தில் அப்பாவியைதூக்கிட்டு மரணதண்டனையைக்கைக்குக்கையாக நிறைவேற்றிமுடித்தார்கள். தான் யாரைக் கொல்லக்கருதினானோ அந்த லாரென்ஸோவின் சிபார்சினாலேயே 'கார்டினல்' என்னும் போப்பின் காரியநிர்வாஹஸ்தன் கொல்லப்படாது மன்னிக்கப்பட்டான்.

இவ்வளவானபோதிலும் லாரென்ஸோவை இன்னும் துன்பம் விட்டபாடில்லை. போப்பென்னும் பாதிரித்தலைவன் தன் உள்ளக்கருத்து நிறைவேறாமற்போனது கண்டு மதிமருண்டு, லாரென்ஸோவின்மேல் சினங்கொண்டு, 'அக்கிரமத்தின் சுதன்,' என்றும் 'ஆத்மநாசத்தின் குழவி,' என்றும் அவனுக்கு வசைப்பேரிட்டு மதப்பிரஷ்டம் செய்ததாகக் கூறித் தனது அதிகாரத்தைக் காட்டினான். இதுவும்பலிக்காமை கண்டு நேப்பிள்ஸ் நாட்டு மன்னனோடு ஒன்றுசேர்ந்துகொண்டு பிளாரன்ஸ் பிரதேசத்தின் மேல் படையெடுத்துச் செல்ல ஒரு சேனையை அனுப்பினான். இத்தருணத்தில் லாரென்ஸோ இன்னதுசெய்கிறதென்று தெரியாமல் மனங்குழம்பினான். தன் பொருட்டுத் தனது நாடு பாழாக்கப்பட்டுத் தன்னாட்டார் கொல்லப்படுவதைக் கண்டான். தங்கள் பொருளுக்கு வடிகால் ஏற்பட்டுவிட்டதையும் தங்கள் வாணிபம் தடைப்பட்டுப் போனதையும் குறித்து பிளாரன்ஸ் நகரத்தார் வியாகூலப்படுவதைக் கேட்டான். தன் சுதேசத்தாரே சீக்கிரம் தன்னைப் பிடித்துத் தன் பகைவரிடம் ஒப்புவித்துவிடுவார்களென்று உணர்ந்து என்னசெய்வது என்று ஆலோசிக்கலானான். இந்த வாபத்துவேளையில், அவன் அதிசாதுரிய புத்திமான் ஆதலால் தப்பிப்பிழைக்கத் தைரியமான ஒரு உபாயத்தைக் கண்டறிந்தான். நேப்பல்ஸ் நகரத்துக்குத் தானே நேரில் போய் அம்மன்னனிடத்தில் தன்னை ஒப்புவித்துக்கொள்ளுதல் நன்றென்று அவனுக்குப் புலப்பட்டது. பின்வருமாறு இரண்டிலொன்று ஆகும் என்று அவனுக்குத் தோன்றிற்று: ஒன்று, பிளாரன்ஸுக்கு உதவிபுரிய உடன்படும்படி மன்னனைச் செய்யலாம்; அல்லது, மிகவும் விபரீதமாக நேர்ந்தாலுங்கூட, பாதிரித்தலைவனிடம் தான் ஒப்புவிக்கப்படலாம். அவ்வாறு ஒப்புவிக்கப்பட்டால் தன் ஜன்மநகரம் துன்பமடையாமல் தப்பும். கேட்போர் மனதைக்கவர்ந்து அவர்களைத் தன் வசப்படுத்தும்படியான சொற்றிறம் பொருந்தியவனாதலால், அவன் நேப்பல்ஸ் அரசனைத் தன் கருத்திற்கு இணங்கும்படி செய்துவிட்

டான். நேப்பல்ஸ் நாட்டிற்கும் பிளாரென்ஸ் நாட்டிற்கும் ஏற்பட்ட ஒரு உடன்படிக்கையுங் கையுமாக ஊருக்குவந்து சேர்ந்தான்; போரும் முடிவுக்கு வந்துவிட்டது. ஸிக்ஸ்டஸ் என்னும் கொடிய பாதிரித்தலைவனும் காலஞ்சென்றுவிட்டான். லாரென்ஸோவிடத்தில் நட்புள்ள போப்பு ஒருவன் பட்டத்துக்கு வந்துவிட்டான்.

லாரென்ஸோவின் மற்றொரு பிரதாபம் சொல்லாமல் பாக்கியாக நிற்கிறது. சிற்பக்கலை வல்லோரையும், கல்விமான்களையும் மிகவும் ஆதரித்து வந்தான். நன்குமதிப்பு என்னும் இதமான வெப்பம் பெறாமல், அலட்சியமாக நடத்தப்பட்டு, கீர்த்தியின்மையாகிய இருட்டிலாழ்ந்து, உளஞ்சிறுத்து, இளைத்துவந்த எளிய கல்விமான்களும், சிற்பக்கலை வல்லோரும் அவனது அன்பான நன்குமதிப்பால், இதம்பெற்று ஆநந்தித்தார்கள். செளகரியத்திற்கும், ஞானவிருத்திக்கும் வேண்டிய சகல சாதனங்களும் நிறைந்த பிளாரன்ஸ் நகரம், அக்கலைஞர்களுக்கு ஒரு அழகிய இல்லம்போல் ஆய்விட்டது.

மெடிச்சிகளின் அரண்மனையில் அதிதிகளை விசுவாசமாக நடத்தி உபசரிப்பதற்கு ஒரு போஜனசாலை, கிரேக்கு பாஷையை அபிவிருத்தி செய்ய ஒரு கல்விச்சங்கம், மிகவும்அருமையான கையெழுத்துக் கிரந்தங்கள் நிறைந்த ஒரு புத்தகசாலை, மிகவும் சிரத்தை விளைவிக்கத்தக்க பிராசீன சரிதசம்பந்தமான அரிய ஞாபகசின்னப் பொருள்களால் நிறைந்த ஒரு விநோதசாலை, ஆகிய இவைகளெல்லாம், அமைக்கப்பட்டிருந்தன.

(இன்னும் வரும்)

உடையார்கோவில், **அப்பாசாமி அய்யர்.**

# தமிழ்நூல்களும் நூலாசிரியர்களும்.

## வீரசோழியத்தின் காலவரையறை.

1897, 1898 இவ்வாண்டுகளில் துரைத்தனத்தாரால் பிரசித்தப்படுத்தப்பட்ட கல்வெட்டு சம்மந்தமான ரிப்போர்ட்டுகளில் கூடல்சங்கமம் என்ற இடத்தில் போர்புரிந்து வெற்றி பெற்ற முதலாவது வீரராஜேந்திரன் என்னும் சோழராஜன் யுத்த சந்தர்ப்பங்களை வேற்றுநாடுகளுக்குச் சென்றதைப்பற்றிச் சொல்லப்பட்டிருக்கிறது. அந்த வீரராஜேந்திரன் காலத்தில் தான் வீரசோழியம் என்கிற பிரசித்திப் பெற்ற இலக்கணநூல் இயற்றப்பட்டது என்பது, 1899-ம் வருஷத்துக் கல்வெட்டு ரிபோர்ட்டால் நிச்சயமாய்விட்டது. சிலர் இவ்வீரசோழியம் கந்தபுராணத்திற்கு முந்திய காலம் முதல் வழங்கிவருகின்றதென்றும், கந்தபுராணத்தை காஞ்சீபுரத்தில் அரங்கேற்றுங்காலத்தில் "திகடசக்கரச்செம்முகமைந்துளான்" என்கிற செய்யுளில் இலக்கண சம்மந்தமான ஒரு ஆட்சேபனை நேர்ந்தபோது வீரசோழியத்தினின்று ஒருவிதி எடுத்துக் கூறப்பட்டதென்று பழங்கதை கூறுவாருண்டு; வேறு சிலர் இந்த நூல் கி. பி. 1070-ம் வருஷத்தில் அரசாள ஆரம்பித்த சாளுக்கிய சோழனாகிய முதலாவது குலோத்துங்கன் காலத்தில் செய்யப்பட்டதென்று சொல்லுகிறார்கள். மா-ா-ஸ்ரீ W. C. தாமோதிரம் பிள்ளையவர்கள் தான் பதிப்பித்த வீரசோழியத்தின் முகவுரையில் முதலிற் கூறப்பட்ட பழங்கதையை அநுசரித்து, கி. பி. 778-ம் ஆண்டில் இந்த நூல் வழங்கிற்றென்றும், ஆகவே, சுமார் 1,500 வருஷங்களுக்கு முந்தி இயற்றப்பட்டிருக்கவேண்டுமென்றும், அபிப்பிராயப்படுகிறார்கள். இந்நூலையும் அதற்கு இப்போது வழங்கி வரும் உரையையும் உட்புகுந்து ஆராய்ந்து பார்க்குங்கால், மேற்கூறிய அபிப்பிராயங்களுக்கு யாதொரு ஆதாரமும் ஏற்படவில்லை.

இந்த நூலைச் செய்தவரின் போஷகன் வீரராஜேந்திரன் என்னும் ஓர் சோழனென்று அதன் சில செய்யுள்களால் விளங்குகின்றது. வீரசோழியத்தைச் செய்தவரின் மாணாக்கரிலொருவரே அதற்கு உரையாசிரியர் என்பதற்கு ஒருவரும் ஆட்சேபணை செய்யவில்லை. அவ்வுரையில் ஒருவிதப்பாவினத்திற்கு உதாரணமாக முதலாவது ராஜேந்திரன் தனக்குச் சரித்திர விருதாகக்கொண்ட செய்யுளில் "திருமன்னிவளர," என்பது முதல் "சீர்த்தனிச்செல்வியும்," வரையில்எடுத்துக்கூறப்பட்டிருக்கிறது. (வீரசோழியம் 122-ம் பக்கம் பார்த்துக்கொள்க). 141-ம் பக்கத்தில் கூறப்பட்ட மற்றொரு பாவினத்திற்கு உதாரணமாக, வீரராஜேந்திரனுக்குக் கொஞ்ச காலம் முன்னாலரசாண்ட ராஜாதி ராஜசோழன் எந்தப்போரில் உயிர் துறந்தனனோ அந்த யுத்தம் நடந்த கோப்பம் என்னும் இடத்தைக் குறித்துச் சொல்லும் ஓர் செய்யுள் கூறப்பட்டிருக்கிறது. மறுபடி 196-வது பக்கத்தில் ஓர் வகை அணி இலக்கணத்திற்கு உதாரணமாகக் கூடல்சங்கமம் என்னும் இடத்தில் நடந்த யுத்தத்தைப்பற்றிய செய்யுளானது கூறப்படுகின்றது. இந்த மேற்கோள்களினால் நன்றாக விளங்குவது யாதென்றால், குறைந்தபட்சம் வீரசோழியத்தின் உரையாவது கூடல்சங்கமத்தில் போர்செய்த முதலாவது வீரராஜேந்திரன் காலத்திற்கு முந்தி இயற்றப்பட்டிருக்க முடியாதென்பதுதான். நூலின் செய்யுள்களிலேயே வீரராஜேந்திரன் என்னும் அரசன் நூலாசிரியனுடைய போஷகன் என்று சொல்லப்பட்டிருப்பதாலும், கூடல் சங்கமத்து யுத்தம் குறித்துப் பேசப்பட்டிருக்கிற வீரசோழிய உரை, நூலாசிரியனின் மாணாக்கனாலேயே எழுதப்பட்ட படியாலும், கூடல் சங்கமத்தில் போர்புரிந்து கி. பி. 1064-ம் வருஷம் முதல் கி. பி. 1070-ம் வருஷம் வரையில் ஆண்டு வந்த முதலாவது வீரராஜேந்திரன் காலத்திலே தான் இந்த் நூல் எழுதப்பட்டது என்று எண்ணுவதற்குத் தகுந்த நியாயம் இருக்கிறது. இந்நூலைச் செய்த புத்தமித்திரனாரின் பிறந்த ஊர் சோழமண்டலத்து மலைக்கூற்றம் என்னும் உட்பிரிவில் உள்ள பொன்பெற்றி என்னும் கிராமம் என்று உரையில் (196-ம்

பக்கம்) சொல்லப்பட்டிருக்கிறது. Dr. Burnell துரையவர்கள் இம் "மலைக்கூற்றம்" என்னும் நாடும் "மலைக்கோட்டம்" என்பதும் "ஹியௌன்த்ஸாங்" என்னும் சீனத்துப்பிரயாணி "மோலோகிஞ்சா" என்று கூறும் நாடும் ஒன்றுதான் என்றும் அந்த நாடு காவிரி நதியின் அரங்கத்திலுள்ளதென்றும் கண்டு பிடித்திருக்கிறார். உரையிற்கண்டபடி, வீரசோழியத்தின் கிரந்தகர்த்தா, மதுரையில் ஒரு துறைமுகமாகிய தொண்டித் துறைக்கு இறைவனென்று சொல்லப்பட்டிருத்தலால், இவர் பிறந்த ஊராகிய பொன்பெற்றியைப் பாண்டிய மண்டலத்தில் தேடவேண்டியதாக இருக்கலாம். அப்பொன்பெற்றி யென்பது, பட்டுக்கோட்டைத் தாலூக்கா மணமேற்குடிக்கு பத்து மைல் தூரம் தென்மேற்கேயுள்ள பொன்பெற்றி யென்கிற கிராமத்தினின்றும் வேறல்லவென்று சிலர் அபிப்பிராயப்படுகிறார்கள். பின் சொன்ன இக்கிராமம் பூர்வகாலத்தில் பாண்டி மண்டலத்தில் சேர்ந்திருந்ததினால், பாண்டி நாட்டணாகிய தொண்டித்துறைக் கிறைவனாகிய "பொன்பெற்றிகாவலன்" புத்தமித்திரன் பிறந்த ஊர் இவ்வூராகவே இருக்கலாம் என்று ஊகிக்கப்படுகிறது ஆயினும், சோழநாட்டில், கும்பகோணம், சுவாமிமலை இவைகளுக்குச் சமீபத்தில், பெரிய வேளாளர் கிராமம் ஒன்று பொன்பெற்றி யென்றே பெயருள்ளதாக இருக்கிறது; மேலும் மலைக்கூற்றம் என்னும் பகுதியிலும் இருக்கிறது. மகாவித்வான் மகா-௱-ஸ்ரீ வெ. உத்தமதானபுரம் சுவாமிநாதய்யரவர்கள், இவ்வூருக்கே நேரில் விஜயம் செய்து இவ்விஷயத்தைப்பற்றி விசாரித்து ஆராய்ச்சி செய்தார்கள் என்று தெரியவருகிறது. ஆகவே, அவர்கள் பிரசித்தப்படுத்தப்போகிற "தமிழ் நாவலர் சரித்திர"த்தில், இதைப்பற்றிய நிர்ணயம் வெளியாகலாம்.

இவ்விலக்கண நூலின் காலத்தை வரையறுத்துக் கூறுதல் தமிழ் வித்தைக்கு மிகவும் பயன்படத்தக்கதாக இருக்கும். ஏனெனில் இந்நூலின் உரையில் அக்காலத்தில் வழங்கிய நூல்களினின்று அநேக வரிகள் மேற்கோள்களாக எடுத்துக்கூறப்பட்டிருக்கின்றன. இம்மேற்கோள் களுக்கு உரை

விடமாகிய நூல்களெல்லாம், கிருஸ்து சதாப்தம் பதினோராம் நூற்றாண்டின் அந்தத்தில் வழங்கிவந்தன என்பதற்கு ஆட்சேபிக்க இடமில்லாத நியாயங்கள் இருக்கின்றன.

உடையார்கோவில், அப்பாசாமி அய்யர்.

---

முருகன்றுணை.

# பதிற்றுப்பத்து-உரை.

பதிற்றுப்பத்து :—ஒவ்வொரு பாகத்திலும் பத்துப்பாக்களடங்கிய பத்துப்பாகங்களுடையது.

## இரண்டாம் பத்து.

இஃது இமையவரம்பன் நெடுஞ்சேரலாதனைக் குமட்டூர்க் கண்ணனார் பாடியது.

செய்யுள் (௰௧).

துறை :— செந்துறைப்பாடாண்பாட்டு, அதாவது விகார வகையான் அமரராக்கிச் செய்யும் அறுமுறைவாழ்த்தினைப் போலாது உலகினுள் இயற்கை வகையான் இயன்ற மக்களைப் பாடுதல்.

வண்ணம் :—ஒழுகுவண்ணம். அதாவது ஒழுகியலோசையாற் செல்வது.

தூக்கு :—செந்தூக்கு. அதாவது செஞ்சீரடியால் வந்த பாட்டு.

பெயர் :—புண்ணுமிழ் குருதி.

"பகைவர் மார்பைத் திறந்த புண்ணினின்றுஞ் சொரிகின்ற குருதியால் கடல்நீர் இயற்கையான கருநிறமாறிக் குங்குமச் சேற்றைப்போல் ஆகும்''; எனச்சிறப்பித்தலால் இப்பெயர் பெற்றது இச்செய்யுள்.

உரை.

[குறிப்பு :—இதிற்குறித்திருக்கும் இலக்கங்கள் பதிற்றுப்பத்து அச்சுப்பிரதியின் செய்யுள் அடிகளின் இலக்கங்கள்.]

7-8. சேவ்வாய் :—குருதியின்—உதிரத்தாற் சிவந்த வாயையுடைய வாள் தன்னைத்தடுப்பவரை அறுக்க, அதனால் திறக்க

ப்பட்ட அரிய மார்பினிடத்துண்டாகிய புண்ணினின்றுஞ்சொ ரிகின்ற இரத்தத்தால்.

9-11. மணிநிற—ஊக்கலை:—கரியநிறத்தையுடைய பெரிய கடலினது நீர், தனது நிறம்மாறி குங்குமச்சேற்றைப்போலா கும்படி செய்து, பகைவர் காவலிடத்தைத்தொலைத்து வலிமை யான் மிகுந்த சிறப்பால் உயர்ந்த உயர்ச்சியையுடையவனே.

21-25. கவிர்ததை—கடந்து:—முருக்கென்னும் முள்ளுடைமரம் நிறைந்த மலையின் கண்ணே துயில்கின்ற கவரிமா, பரவி விளங்குகின்ற அருவியையுடைய நீரையும் நரந்தப்புல்லை யும் ஒருவரானும் வருத்தமின்றிப் பகற்காலத்துத் தான் நுகர்ந் தது மன்றி கனவினும் காணுகின்ற, ஆரியர் நிறைந்த கீர்த்தி மிக்க இமயத்திற்கும் தெற்கிலுள்ள கன்னியாகுமரிக்கும் மத்தி யிலுள்ள அரசர்களில் மேலாகக்கூறப்பட்டவர்களின் வலிமை கெட அவர்களை வென்று.

12-16. பலர்மோசிந்து—சேரலாத:—பலர் கூடிப் பாதுகாத் த திரண்ட அழகிய கடம்பின் காவலாக உடைய அடி, அற்றுப் போக வாளை ஏவி வென்று, வீசி முழங்குகின்ற முரசத்தைச் செய்த, பன்னுடையை யரிந்து செய்யப்பட்ட தேன் ஒழு கின்ற பனைமாலையைத் தரித்த மார்பையும், போரில் வெல் கின்ற சேனையையுமுடைய சேரனே.

1-6. வரைமருள்—உலர்ந்தாங்கு:—பெரியதிவலையாக உடை யமலைபோன்ற அலைகள், காற்று மோதி வீசியதால் அசைகின்ற நிறைந்த நீரையுடைய குளிர்ச்சி பொருந்திய மிகப்பெரிய கட லில் நெருங்கி வருத்தத்தைச் செய்த அசுரர்களது காவலைக் காக்கின்ற சூரனுதற்றன்மையையுடைய மாவின் பெரிய அடி யைத்தறித்த புகழ்பெற்ற, மிக்ககோபமூண்ட, வலிமைபொரு ந்திய முருகக்கடவுள் களிறூர்ந்தது போல.

17-20. மார்புமலி—கண்டிகும்:— மார்பினிடத்து நிறைந் த பசியமாலையோடும் நெற்றிப்பட்டத்தோடும் விளங்குகின்ற வலிமை மிக்க மருப்புடைய குற்றமற்ற யானையினது அஃழகு மிகுந்த எருத்தத்தேறி விளங்கிய, பலரும்புகழ்கின்ற நின் செ ல்வத்தை இனிதாகக் கண்டோம்.

(இன்னும் வரும்)

பண்டிதர், **K. M.** நடேச அய்யர்,

கிருஷ். (சபையோர்களைநோக்கி.)

வாணிதிச் செல்வமும்,
தெண்டிரை வளாகச் சிறப்புஞ், சிற்றிடைப்
பெண்டிர்தம் போகமும், பேராற் றிடையிற்
காண்டகு குமிழியே! காத லோடு
பூண்டுற வாடிப் பொன்றுப் புகழை
எய்தின ரன்றே விருந்தவ ரென்றும்?

(அரியநாதனை நோக்கி.)

வொயிலவன் படுதலும் விரிதலுங், குலாலன்
றிகிரியும் போலத் திரிதரும் வாழ்க்கை
யுருத்தலால் வாடிநம் முழைவந் தோனைச்
சென்று கொணர்க.

(அரியநாதன் கடை காவலனுடன் வெளியே போக.)

(நாகமனைநோக்கி.) சேனைத் தலைவ!
வென்றியே நம்பால் விளம்பினை. வழுதி
மன்னவன் விதியை வகுத்து நோக்கி
லென்னுடை யாக்கமிங் கேதாய் விடுமோ?
கீர்த்தியோ டிந்நாள் கேண்மை மிக்க
போர்த்துகியர் புணர்ப்பினாற் றந்த
வெய்யெனச் செல்லு மிருபதி னாயிரங்
கொய்யுளைப் பாய்மாக் கொண்டநஞ் செயல்போல்,
பகைவனு மன்னவர் பண்மை நாடிநம்
தொகையினு மிரட்டித் துரங்க மாப்படை
யீட்டித் தருக்குட னிருக்கின்றான்.
கேட்டவென் கவலை களைக்க லாவதோ?

(அரியநாதன் சந்திரசேகரனுடன் வருதல்.)

விருத்தம்.

சந்திர. சரணம் விந்தைவாழ் மொய்ம்புறு தாரவ சரணம்
சரண மன்னுயிர்க் கின்னரு டந்தவ சரணஞ்
சரண மொன்னலர் முடிதொடு கழலவ சரணம்
சரணந் தண்டுறை மன்னவர் மன்னவ சரணம்,

கிருஷ். (அரசனரியாசனத் தெழுந்து)

நிலமண்டிலவாசிரியப்பா.

ஒழிக, ஒழிக, வுன்னுடை யவலம்.
செழியனே! வருக, செவ்விதி னமர்க.
யாதுநின் குறைதா னியாவருன் பகைவர்?
ஓதுக, வுன்பகை யொழித்தர சளிப்போம்.

சந்திர. விண்கொளப் பரந்து வியன்புக ழோங்கத்
தண்குடைக் கீழித் தாரணி தாங்குங்
காவல ரேறே! கஞ்சத் தடஞ்சூழ்
பூவலர் சோலைப் பொன்னிநா டுடையான்
வீரசே கரனும் வேந்தன் றருக்கிப்
பாரவெஞ் சிலைவிடு பகழிக் கிலக்கென
யாதொரு தீங்கு மிழைத்திடாத் தமியனை,
வாது புரியா வஞ்சமி லேனை,
மிடிபிணி நீக்கி வேலைசூழ் நாட்டின்
குடிகளை யோம்பிக் குளம்பல நிரப்பி
ஆலயம் புதுக்கி யன்னசத் திரமுஞ்
சாலையுஞ் சதுக்கமுஞ் சமைத்துச் சாந்தமாய்
மாந்தரும் விரும்ப மாண்புறு வேனை,
காந்திய மனத்தின் கதித்தெழு சேனை
கொதித்தெழு மாறு கூட்டிடா தேனை,
மதித்தவ னாகி வளைந்தனன் புரியை.
செய்திற னின்றிச் சிந்தை கலங்கியே,
உய்திற னறியா தொருபடை யீட்டி,
முரசொலி கறங்க மூரித் தானையோ
டரசனை யெதிர்த்துட னமர்புரி காலையில்,
அவன்படை வீரரா லவிந்தனர் பலரும்
இவண்போந் திட்டே னென்பதி யிழந்து.
தாரணி காவலனே! தஞ்சநின் சரணம்.

கிருஷ். (மிகுந்த ஆச்சரியத்தையடைந்து)
இரவலன் போலிவ ணெய்தி வருந்துந்
தன்மை, யக்கோ! சாற்றுவ தரிது.

நன்மையே புரிந்து நல்வழி நின்றோன்,
மன்பதை விரும்பு மாட்சிமை கொண்டோன்,
என்ப திவன்செயல். ஏனையன் வஞ்சன்;
பொல்லாச் சூழ்ச்சியாற் புக்கிவன் றனை
எல்லா மழிந்திட, விவன்றனை யோட்டிப்
பதிநிதி கவர்ந்ததைப் பாரீர், பாரீர்!

திம்ம. துதிப்படாம் போர்த்த துன்னல ரேறே!
உன்னுடை யானை யுதய கிரிசென்
றன்னதற் கப்பா லார்கலி யோங்கும்.
அவனுறு குடிகளுந் றுஞ்சை யமர்ந்து,
புவன நின்போல் புரப்பா ரிலையென,
கோடையின் மாரியாற் குளிர்ந்திடு பயிர்போல்,
ஓடையிற் குதிகொண் டோடுமீ னொப்பக்,
கார்வரக் கண்டு களித்திரு மாந்து
வார்சிறை விரிக்கு மஞ்ஞை நிகர்ப்ப,
இன்புற் றிருந்தன ரேனை மன்னர்
துன்பந் தொலைத்துத் துறக்கந் தவர்போல்.
கொற்றவ! நின்குடை குமரி யெல்லை
யுற்றிடு கன்னியு மோங்கிய பொன்னியும்
கலந்து வாழ்தரக், கடவு ளினைத்தே
குலந்திக ழிந்தக் குரிசிலைக் தூதாய்
விடுத்தனர் போலும். வேலைசூ ழுலகம்
அடுத்துநின் னாணை யமர்ந்து நன்மை
தாய்த்திடுங் காலந் தோற்றிய தைய!
பொய்த்த வஞ்சப் புணர்ப்புடைச் சென்னியைப்
போரிடை வீட்டவிற் பூட்டியே, வேப்பந்
தாருடை யார்க்கே தார்முடி சூட்டித்;
தஞ்சைமா நகரைத் தாங்கொளத் தகுமால்!

நாகமன். விஞ்சையின் மதிவலான் விரித்த விநயம்
நன்கு! நன்கு! ஞால முடையாய்!
தென்கும ரிக்கரை சேர்வது திண்ணமால்.

ராமன். வந்தனம்! வந்தனம்! வாகினித் தலைவனே!
சிந்தனை முடித்தவென் றெய்வம் வாழ்கவே!
குமரிநீ ராடினீர்! குவலயங் குலவுதென்
குமரிநீ ராடலுங் கூடலுங் கூடுமே!

(சபையிலுள்ளவர்கள் எல்லோருஞ் சிரிக்க.)

நாகமன். மேனாள் வடாதிசை மேவித், துருக்கர்
நானா திசையிலு நலிந்தவ ரோடப்
போர்ப்பெருங் கோலம் பூண்ட நம்வலி
தூர்த்தன் சென்னியின் றோள்வலி தொலைக்கக்
குன்றலு மாகுமோ? கொற்றவ!

சேவப்பநாயக்கன். நால்வகை
யொன்றிய தானைக ளுடனுறச் சென்று
தாக்கிடின், வெற்றியைத் தான்பெற லாகுமோ-
ஊக்கிய தோள்வலி யுகுத்திட நேருமோ-
என்பது கருதியிங் கிருந்தவ ரல்லேம்.
துன்பொடு நம்பாற் றோன்றிய வெந்தற்
குறுதுணை யாகிநம் முயர்படை யீட்டி
முரசொலி கறங்க மொய்ம்பொடு செல்லுதல்
தந்திரமோவெனச் சிந்தைசெய் தேமால்.

கிருஷ். (நாகமனை நோக்கி)
வனைகழற் றானை வளைதர, வார்திரைக்
கனைகடல் சூழுங் கன்னிநா டேகி,
வெற்றி கொண்டிவண் மீளவல் லார்கள்,
மற்றைய ரெவரே மாற்றலர் சூழ்ச்சிக்
குள்ளுடை யாம னுறுத்து நின்று
நள்ளா ருயிர்க்கோர் நமனெனப் பார்கள்?
ஆதலின், வீர!நம் மாணைமேற் கொண்டு
போதலே புகழ். நம் புரவிப் படையுடன்
சென்று சென்னியைச் சிறைகொடு, நம்பெயர்
நின்றிடத் துவச நிலைபெறச் செய்து,

ஆங்கில நமதர சாக்கிப், பாண்டி
மன்னவன் றனக்கு மணிமுடி கவித்து,
வருவான் செல்க.

நாகமன். வார்முரசொலிப்ப,
கரிவாம் புரவிதேர் காலாட் படையுடன்,
வழுதியின் வரவே, வைகைநா டுறுவன்;
தொழுதனன் கனைகழற் றுணையடி விடையே.

கிருஷ். (சந்திரசேகரனை நோக்கி.)
நான மாடி நறுஞ்சாந் தணிந்து
போனக மருந்திப் பொலந் தவிசிருப்பாய்.
கார்க்கடற் றானை கலப்ப நாகமன்
போர்ப்பெருங் கோலம் பூண்டு நம்பால்
வந்து நல்லுரை வழங்குங் காலையில்,
சிந்தை மகிழ்வுடன் செல்க சிரிதே.

முதற்களம் முற்றும்.

---

## அங்கம் 1.--களம் 2

அரசற்குச் செல்வப்புதல்வி காஞ்சனையம்மன். இம்மங்கைக்குத் தோழியர், மூர்த்தியம்மன், மதிவிலாசனி முதலானவர்கள். இக்காஞ்சனை நாகமன் புதல்வனும் நமது கதாநாயகனுமான விசுவநாதனிடத்தே ஆழ்க்காதல் கொண்டாள். இளமையில் அவனுடன் விளையாடியும், பலநூல்கள் பயின்றும், உரையாடியும் வந்தமையின் காதல் மிக்குயர்ந்தது. பருவமுற்ற காலையில் நாதனையன்றி ஒருவனையும் ஆடவனென்று கருதாள். தான் தொழுந் தெய்வத்துக்குப் பல பணிகளாற்றி வீணையைமீட்டிப் பாடி நாதனைத் தா என்று வேண்டுவள். உருவெளித்தோற்றங் கண்டு மயங்குவள். தனது அருமைத்தோழி மூர்த்தியம்மனிடத்தே சொல்லி வருந்துவள்.

## அங்கம் 1—களம் 2.

### இடம் கன்னியாமடம்—காலம் எற்பாடு.

### காஞ்சனையம்ம— வீணையைமீட்டிப்பாட.

கோச்சகம்.

தாதுலரா நறுந்தாமஞ் சாத்திமணி விளக்கெடுப்பக்
கோதையபர்பல் லாண்டிசைப்பக் கொடியாடத் திருக்கோயிற்
கேதமிலாத் திருப்பணிக ளெழிலாக வியற்றிமனங்
காதலுற வடிபணிந்துங் கமலையருள் செய்கிலையே. (1)

தண்காட்டு வயனுடு நனையிறையு மறவிடுத்து
விண்காட்டு வியன்மதில்சூழ் விஜயநகர்ச் செல்வியெனப்
பண்காட்டி யாழிசைத்துப் பாடினனிற் பரவியருட்
கண்காட்டி யஞ்சலெனக் கமலையருள் செய்கிலையே. (2)

வேதமுமவ் வேதத்தின் வியன்முடிபு மெய்த்தவர்தம்
போதமுங்கண் டுணர்வரிய புண்ணியனுங் கண்ணனையே
நாதனெனக் கொண்டமரு நாயகியே நாதனருட்
காதலுறப் பெற்றிடவுங் கமலையருள் செய்கிலையே. (3)

### வீணையை யொருசார்வைத்துப் பெருமூச்செறிந்து பஞ்சணையிற் சாய்ந்து.

(நேரிசை யாசிரியப்பா.)

ஆயினு, நின்னையா னலுத்துக் கொள்வதென்?
தாயினு நல்லை நீ, தண்ணருட் செய்வதில்.
ஊன்னு ருடலெடுத் துலகுழல் மாந்தர்
மேனாட் செய்த வினைத்தொடர் பாலிப்
பிறவியின் பயனைப் பெறுவ ரென்பரால்.
அறியே னடியே னாற்றிய தொல்வினை.
தண்மதி போலத் தழைத்திடு முகமும்,

பண்புறு படிகநேர் பரந்த நெற்றியும்,
கலந்தவர்க் கருளுங் கமலக் கண்களும்,
விலங்கலை வென்ற விந்தைவாழ் புயமும்,
தருநிகர் தருங்கொடைத் தாள்தொடு தடக்கையும்,
உருவெளி யாக, விங் கொருவனைக் காட்டி
கனங்குழை யொருத்திமேற் கருப்புச் சிலைவளைத்
தனங்கவே ளெய்த வாளுப் புண்ணிற்
றென்ற னுழையத் தெருமர லுற்றேன்.
இன்றெனை யஞ்ச லெனக்கரங் கவித்தென்
மனத்துட் புக்க மன்னவன் வந்துயா
னினைத்த வண்ண நேர்படா னெலவன்
அவமே! பவமே! யமைத்தன னந்தோ!
தவமே யிதுவோ? தரிக்க வல்லனோ?
இனைய னன்றிமற் றேவரா யினுமென்
கனவி லொருகாற் காணப் படினும்,
நண்பாக் கொள்ளே னிலத் தவரைப்
பெண்பா லார்போற் பேசி வெறுப்பன்.

(ம்திவிலாசனியும்— மூர்த்தியம்மனும் உரையாடி உள்ளே பிரவேசிக்க.)

மதிவி. எடி! யென்? னிதுவரை யாதுதான் செய்தனை?
போடிபோ! விந்தப் புதுமலர் நோக்காய்.
சான்மர கதம்போற் சாண்பது சாணும்.
பானிற விதழ்ப்புறப் பகுதியைப் பாராய்.
பின்னு மகவிதழ்ப் பெருமையின் ளுர்நுதற்
றன்னுருங் குமம்போற் றுலங்குவ பாராய்.
கண்ணிணை மூபரக் கட்டி வைத்ததோ
ரண்ணுரு மூசிநே ரிலங்கிய பொகுட்டையும்,
சங்கொரு சேய்தன் னெழிலு நீட்டிய
பாங்கென வோரிதழ்ப் படிவையும் பாராய்.
வெறிகமழ் மணமும் விராஅய்க் கலந்த
செறிபொடி நலனுந் திகழ்தர நோக்காய்.

64

இங்கொரு மூவே மேற்றுத் திருத்திய
பொங்கரென் பகுதியிற் பொலிவுற விளங்க
இந்நிலத் தாமரைக் கிணையெனச் சிறிதும்
உன்னுடை மலரை யுரைத்திட வொண்ணுமோ?
சேடி! யுன் செய்கை தெற்றெனத் தெரிந்தது. ஒ
ராடவற் குள்ள மழிந்தனை யாக, வுன்
புலத்தைக் காத்திலை, புலத்தையுங் காத்திலை.

மூர்த்தி. நிலைத்தவ ரியற்கை நிகழ்த்திடக் கேண்மோ.
தன்னினை யயலார் தம்பாற் றோன்றிடு
மென்னு முறைபோ லேதிழ நவின்றாய்.
மெத்த மெத்த விளம்பினை பாயிரம்,
அத்தனை வார்த்தைக் காவலே னம்ம!
கலையென் றதோர் கானகம் புக்குழ
லிவளோ நின்றொழிற் கிணையெனப் படுவாள்?
காளையின் வலியென் காக மறியு? நீ
எளனம் பேசவ தித்தனை யோதான்?

மதிவி. அருமைக் காஞ்சனை யம்மனைப் பாங்கியா
மருவிய நமக்கும் வருங்குறை யுளதோ?
உள்ளக் கருத்தெலா மொளியா துரையாய்.

மூர்த்தி. கள்ளத் தனமுங் கபடமு மறிவேன்.
பித்தரைப் போலுளம் பேதித் தவளாய்ச்,
சித்தமுஞ் செயலுஞ் சிந்திய, நாளும்
எய்த்தா மேனி யெழின்மிக வாடிப்,
பொய்த்துயில் கொண்டு புலம்பா நின்றாள்
மாது காஞ்சனை. மனத்துய ருக்கோ
ரேது வெண்ணி யிருந்திடு வேற்கிதன்
மேலுள குறையும் விளம்ப வேண்டுமோ?
எலவார் குழலாய்! இதனைச் சிந்தியா
துன்புக ழோதி யுவந்தனை, யுள்ள
மன்புறு தோழி யவல மறியாய்,
பேதை!